**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலம் - 2021-2022-ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் – சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்மோட்டாருடன் கூடிய 1000 தையல் இயந்திரம் வழங்குதல் - நிருவாக ஒப்பளிப்பு - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிநஆபி1) துறை**

அரசாணை (நிலை) எண். 90

நாள் 09.12.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, கார்த்திகை 23

படிக்கப்பட்டது :

சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநரின் கடித எண். அ6 / 2985 / 2021, நாள் 27.09.2021

*******

ஆணை :-

2021-2022 - ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக்கோரிக்கையின் போது மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

*"சிறுபான்மையினருக்கு 1000 இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் 45 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்"*

2. ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையினை மேம்படுத்த மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதே போன்று சிறுபான்மையின மக்களின் பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கெனவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திக் கொள்ளவும் இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்களை வழங்கிடலாம் என சிறுபான்மையினர் நலத்துறை இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. சிறுபான்மையின நல இயக்குநரின் பரிந்துரையை நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று 2021-22- ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையில் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்தும் விதமாக 1000

சிறுபான்மையின பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய இலவச தையல் இயந்திரம் வழங்குவதற்கு நிருவாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர்களுக்கு கீழ்க்கண்ட தகுதிகளுக்குட்பட்டு தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்:

i) தையல் கலை பயின்றவராக இருக்க வேண்டும் மற்றும் தையல் கலை பயின்றதற்கான உரிய சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.

ii) ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.1,00,000/- ஆக இருத்தல் வேண்டும்.

iii) வயது வரம்பு – 20 முதல் 45 வரை.

iv) கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர் போன்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

v) ஒரு முறை தையல் இயந்திரம் பெற்றிருப்பின் மீண்டும் தையல் இயந்திரம் பெற 7 ஆண்டுகள் கடந்த பின்னரே தகுதி உடையவராக கருதப்படுவர்.

vi) இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் பயனாளிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரிடமிருந்து உரிய விண்ணப்பங்கள் பெற்று தகுதி இருப்பின் முன்னுரிமை அடிப்படையில் தையல் இயந்திரங்களை பெறலாம்.

5. சிறுபான்மையின மக்களுக்கு இலவச மின்மோட்டாருடன் கூடிய 1000 தையல் இயந்திரங்கள் வழங்கிட தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 (Tamil Nadu Transparency in Tender Act 2000) ஆகியவற்றைப் பின்பற்றி விலைப்புள்ளிகள் பெற்று ரூ.45,00,000/- (ரூபாய் நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) செலவில் நிதி ஒப்பளிப்பு கோரி கருத்துருவினை அரசுக்கு அனுப்புமாறு சிறுபான்மையின நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.55581/நிதி(பி,மிபி(ம)சிந)/2021, நாள் 08.12.2021-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
சிறுபான்மையினர் நலன், சென்னை-05.
ஆணையர்,
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்,
சென்னை-5.

இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-08.
மாநில கணக்காயர், சென்னை-18.
நகல்:-
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ்
தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-09.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-09.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக உதவியாளர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9
நிதி(பி,மிபி(ம)சிந/ வ.செ.பொ.II)த் துறை,
தலைமைச்செயலகம், சென்னை-09.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்